| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>ரமேஷ் | EP.32/2020 | 28.08.2023 |

**PW1 குறுக்கு விசாரணை (1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு)**

1ம் எதிர்மனுதாரர் ஹரிஹரன் எனது உடன்பிறந்த மூத்த சகோதரர் என்றால் சரிதான். அவர் முதல்தாரத்து மனைவியின் மகன் ஆவார். 2 வது எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் மனைவி ஆவார். 3 வது எதிர்மனுதாரர் 1,2 எதிர்மனுதாரர்களின் மகள் ஆவார். 4ம் எதிர்மனுதாரர் 3ம் எதிர்மனுதாராரின் கணவர் ஆவார். அசல் வழக்கில் 2 முதல் 6 எதிர்மனுதார்கள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். நானும் எனது சகோதரர் 1ம் எதிர்மனுதாரரும் குடும்ப பூர்வீக சொத்துக்களை தனிதனியாக பாகம் பிரித்து அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் எனக்கு ஒதுக்கப்ப்ட்ட சொத்துக்கள் தான் இந்த மனுவின் சொத்துக்கள் என்றால் சரிதான். மனுவில் 1,2 அட்டவணை சொத்துக்கள் ஓட்டு வீடுகள் என்றால் சரிதான். 1,2 அட்டவணை சொத்துக்களை பொறுத்து எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். 3 வது அட்டவணை சொத்து பாகம் பிரிப்பத்ற்கு முன்பு குப்பைகுழி மனை என்று சொல்வார்களா என்றால் இல்லை காலி மனை என்று தான் சொல்வார்கள். தற்போது வரை காலிமனையாக தான் உள்ளது என்றால் சரிதான். 3 வது அட்டவணை சொத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தின் கிழமேல் தென்வடல் அளவு என்னவென்றால் எனக்கு நியாபகம் இல்லை. 3 வது அயிட்ட சொத்து விபரம் எந்தெந்த புலஎண்ணில் வருகிறது என குறிப்பிட்டுள்ளேனா என்றால் 50, 51பி ஆகும். 3 வது அட்டவணை சொத்தானது காலடி அளவுகளில் தான் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.331/50, 51 ன் சர்வே

வரைபடத்தில் எத்தனை மீட்டர் அளவு உள்ளது என்றால் வரைபடத்தை பார்த்துள்ளேன். அளவு நியாபகம் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரை நான் படித்து பார்க்கவில்லை. அதனால் 1ம் எதிர்மனுதாரர் என்ன எதிருரை செய்துள்ளார் என்ற விபரம் தெரியாது. 3வது அயிட்ட சொத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட அளவை விட சர்வே வரைபடத்தில் கூடுதலான அளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. கூடுதலாக உள்ள இடத்தில் தான் 1ம் எதிர்மனுதாரர் குப்பை கொட்டுகிறார் என்றும் நான் மனுவில் சொல்லியுள்ள இடத்தில் குப்பை கொட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. 3வது அட்டவணை சொத்தின் அளவுகளில் 1வது எதிர்மனுதாரர் குப்பை கொட்டுகிறார் என்பதை காண்பிக்க ஆவணங்கள் ஏதும் இல்லை. 3வது அட்டவணை சொத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட அளவுகளுக்கு அப்பால் கீழ்புறம் உள்ள சொத்தில் தான் 1ம் எதிர்மனுதாரர் குப்பைகொட்டுகிறார் என்றால் சரியல்ல. என்னுடைய இடத்தில் தான் கொட்டுகிறார். ம.சா.ஆ.7க்கான புகார் மனுவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.7க்கான புகார் மனுவை பார்த்தால் தான் அதில் என்ன விபரம் உள்ளது என்று தெரியும் என்றால் சரிதான். எனக்கு பாகம் மூலம் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் எனது அனுபவத்தில் தான் உள்ளது என்றும், 3 வது அட்டவணை சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது போக மீதமுள்ள கூடுதல் இடத்தில் 1ம் எதிர்மனுதாரர் குப்பைகொட்டுவதால் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக தான் எனது இடத்தில் 1ம் எதிர்மனுதாரர் குப்பை கொட்டுவதாக பொய்யாக புகார் கொடுத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்பதால் மனுவை தள்ளுபடி

செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

5,6 எதிர்மனுதாரர்கள் தரப்வு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க 15.09.2023 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.